
# உத்தம இருதயம்

**தம்மைப்பற்றி உத்தம இருதயத்தோடிருக்கிறவர்களுக்குத் தம்முடைய வல்லமையை விளங்கப்பண்ணும்படி, கர்த்தருடைய கண்கள் பூமியெங்கும் உலாவிக்கொண்டிருக்கிறது. (2 நாளா 16:9)**




இங்கு **தம்மைப்பற்றி உத்தம இருதயத்தோடு** என்பது வெறும் நீதியான வாழ்க்கையைப் பற்றி மட்டும் குறிக்காமல், ஆண்டவருக்கு முன்பாக உத்தமமாய் வாழ்வதை பற்றி, அவருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்து அவருடைய நீதிக்கு பங்கு உள்ளவர்களாய் வாழ்வதை குறிக்கிறது. அப்படி நாம் வாழும் பொழுது எப்படிப்பட்ட நன்மையை நாம் பெற்றுக் கொள்வோம் என்பதையும் மேற்கண்ட வசனம் தெளிவாக கூறுகிறது. இப்படி ஆண்டவருக்கு முன்பாக உத்தமமாய் வாழ்ந்தவர்களை பற்றி பரிசுத்த வேதாகமத்தில் அனேக இடங்களில் காணலாம். அப்படிப்பட்ட ஒவ்வொருவரையும் ஆண்டவருடைய கண்கள் தேடி கண்டுபிடித்து, அவர்களுடைய வாழ்க்கையில் தம்முடைய வல்லமையை விளங்கச் செய்தார். அதே வல்லமையை இக்காலத்திலும் நம்முடைய வாழ்க்கையில் விளங்க செய்கிறார். எனவே எப்படிப்பட்ட **தம்மைப்பற்றிய உத்தம இருதயத்தை** ஆண்டவர் எதிர்பார்க்கிறார் என்பதை நாம் விளங்கிக் கொண்டோமானால், நாம் வாழ்நாள் முழுவதும் ஆண்டவருக்கு முன்பாக நம்முடைய உத்தம இருதயத்தை காத்துக் கொள்ள முடியும்.

அதன் மூலம் ஆண்டவருடைய வல்லமையை ஒவ்வொரு நாளும் இம்மையிலும் மறுமையிலும் நாம் பெற்று அனுபவிக்க முடியும். இப்பொழுதும் இப்படிப்பட்ட அனுபவத்தை பெற்ற சில பரிசுத்தவாங்களை குறித்து வேதாகமத்தில் காண்போம்.

**ஆதி 6:8,9 வசனங்களில் "நோவாவுக்கோ, கர்த்தருடைய கண்களில் கிருபை கிடைத்தது. நோவாவின் வம்சவரலாறு: நோவா தன் காலத்தில் இருந்தவர்களுக்குள்ளே நீதிமானும் உத்தமனுமாயிருந்தான்; நோவா தேவனோடே சஞ்சரித்துக்கொண்டிருந்தான்."** இங்கு நோவாவுக்கு கர்த்தருடைய கண்களில் கிருபை கிடைத்தது என்று பார்க்கிறோம். அவருக்கு கிடைத்தது கிருபை தான். ஆனால் அந்த கிருபையை போக்கடிக்காத **உத்தம இருதயம் நோவாவுக்கு இருந்தது**. ஏனோக்கு தேவனோடு சஞ்சரித்துக்கொண்டிருந்தது போல **நோவாவும் தேவனோடு சஞ்சரித்துக்கொண்டிருந்தார்**. அழிவுக்கு தப்பிக் கொள்ளும்படியாய் ஆண்டவர் அவருக்கு கூறிய காரியத்திற்கு கீழ்ப்படிந்து அதன்படி செயல்படலானார் இங்கு விசேஷமாக கர்த்தருடைய கண்களில் கிருபை கிடைத்தது என்று எழுதப்பட்டுள்ளது. ஆம் **2 நாளா 16:9** வசனத்தில் கூறியபடி, கர்த்தருடைய கண்கள் பூமி இயங்கும் உலாவிக்கொண்டிருந்து, அவருடைய இருதயத்துக்கு ஏற்ற நோவாவை கண்டுபிடித்து, தன்னுடைய வல்லமையை அவரிடத்தில் காண்பித்த கிருபையின் மூலம் வெளிப்படுத்தி, பூமியின் அழிவில் இருந்து அவரையும், அவருடைய குடும்பத்தையும் மீட்டதும் அல்லாமல், சகல ஜீவராசிகளையும் பிழைக்க வைக்க அவரையே தம்முடைய வல்லமையால் பயன்படுத்தினார்.

அடுத்ததாக **ஆதி 15:6 இல்** ஆபிரகாமைக் குறித்து வசனம் கூறுகிறது "**அவன் கர்த்தரை விசுவாசித்தான், அதை அவர் அவனுக்கு நீதியாக எண்ணினார்."** மேலும் **ஆதி 15:1 இல்** ஆண்டவர் ஆபிரகாமிடம் **"ஆபிராமே, நீ பயப்படாதே; நான் உனக்குக் கேடகமும், உனக்கு மகா பெரிய பலனுமாயிருக்கிறேன் என்றார்."** . இங்கு ஆண்டவர் **தம்மை பற்றி உத்தம இருதயத்தோடு** தான் சொன்ன வார்த்தையை நம்பி புறப்பட்ட ஆபிரகாமை குறித்து ஆண்டவரே சொன்ன அருமையான சாட்சி **ஆதி 18:17-19 வசனங்களில் "அப்பொழுது கர்த்தர்: ஆபிரகாம் பெரிய பலத்த ஜாதியாவதினாலும், அவனுக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படுவதினாலும், நான் செய்யப்போகிறதை ஆபிரகாமுக்கு மறைப்பேனோ? கர்த்தர் ஆபிரகாமுக்குச் சொன்னதை நிறைவேற்றும்படியாய் அவன் தன் பிள்ளைகளுக்கும், தனக்குப் பின்வரும் தன் வீட்டாருக்கும்: நீங்கள் நீதியையும் நியாயத்தையும் செய்து, கர்த்தருடைய வழியைக் காத்து நடவுங்கள் என்று கட்டளையிடுவான் என்பதை அறிந்திருக்கிறேன் என்றார்."**. ஆபிரகாமின் வாழ்க்கையில் வெளிப்பட்ட கர்த்தருடைய வல்லமை அவர் வாழ்ந்த காலத்தில் மட்டுமல்ல, இன்றளவும் பூமியில் அவருடைய மாம்ச பிரகாரமான சந்ததிகளான இஸ்ரவேல் மீதும், விசுவாச சந்ததியான நம் மீதும் வெளிப்படுகிறது.

அடுத்ததாக மோசேயை குறித்து நாம் காணலாம். ஆண்டவர் அவரைக் குறித்து சாட்சி கொடுக்கும் பொழுது **அவர் தேவனுடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவராய் இருந்தார் (எபிரேயர் 3:2)** என்று வேதம் கூறுகிறது. தேவனுடைய வல்லமை வெளிப்படையாகவே அவருடைய முகத்தில் பிரகாசித்தது. ஆண்டவரோடு முகமுகமாய் பேசினார். செங்கடலை பிளந்தது முதல் மோசையை கொண்டு எத்தனையோ வல்லமையான செயல்களை ஆண்டவர் இஸ்ரவேல் மக்கள் முன்பும், புறஜாதியார் மத்தியிலும் செய்தருளினார். நியாயப்பிரமாணமும், வேதத்தின் முதல் ஐந்து ஆகமங்களும் மோசேயின் மூலமாகவே கொடுக்கப்பட்டது. எல்லாவற்றிற்கும் மேலாக மறுரூப மலையில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவோடு காணப்பட்டு, அவர் எருசலேமில் நிறைவேற்ற போகிற காரியத்தை குறித்து பேசினார். சரீர பிரகாரமான அவருடைய பூத உடலை கூட ஆண்டவர் இம்மண்ணில் அடக்கம் செய்ய விடாமல் அவர் சரீரத்தை கூட தேவனே எடுத்துக் கொண்டார். இவை எல்லாம் உத்தம இதயத்தோடு தேவனுக்கு கீழ்ப்படியும், சாதாரண பின்னணியில் இருந்து வந்து மிகப்பெரிய காரியங்களை தேவ வல்லமையினால் அவருக்கென செய்தவர்களை பற்றி கூறுகிறது. இன்னும் இந்த பட்டியல் நீண்டு கொண்டே போகிறது.

மோசையை போலவே தம் மக்களை வழிநடத்த ஆண்டவர் தாவீதை தெரிந்து கொண்டார். **சங் 78:71,72 வசனங்கள் சொல்கிறது "கறவலாடுகளின் பின்னாகத் திரிந்த அவனை, தம்முடைய ஜனமாகிய யாக்கோபையும் தம்முடைய சுதந்தரமாகிய இஸ்ரவேலையும் மேய்ப்பதற்காக, அழைத்துக்கொண்டுவந்தார். இவன் அவர்களைத் தன் இருதயத்தின் உண்மையின்படியே மேய்த்து, தன் கைகளின் திறமையினால் அவர்களை நடத்தினான்."** கறவலாடுகள் பின்னாகச் சென்ற அவரை என் இதயத்திற்கு ஏற்றவனாக கண்டேன் என்ற சாட்சியோடு கூட, **தம்மை பற்றி உத்தம இருதயத்தோடு தாவீது** இருக்கிறார் என்பதை விளங்க செய்தார். பல்வேறு சூழ்நிலைகளில் பலவித இக்கட்டுகளையும், சோதனைகளையும், போர்களையும், சூழ்ச்சிகளையும் காண நேர்ந்தாலும் தாவீதோ அவரை சுரமண்டலத்தால் பாடி துதித்து மகிழ்ந்தார். சங்கீத புத்தகத்தில் அநேக அருமையான சங்கீதங்களை பாடினார். தேவகுமாரானாம் இயேசுவும் தாவீதின் குமாரனே என்று அழைக்கப்பட்டார். எருசலேமில் யூதாவை ஆள என்றைக்கும் உனக்கு ஒரு வித்தை கட்டளையிடுவேன் என்று ஆண்டவர் அவருக்கு வாக்குரைத்தார்.

ஆம் இதைப்போல் நாம் எலியா, எலிசா, தானியேல் மேலும் புதிய ஏற்பாட்டில் அப்போஸ்தலராகிய பவுல், பேதுரு, யோவான் என்று எத்தனையோ தேவ பிள்ளைகளின் வாழ்வில் தம்மை அவர்கள் உத்தம இருதயத்தோடு பின்பற்றினத்தினிமித்தம் வல்லமையான காரியங்களை அவர்களின் மூலம் செய்தருளினார். இன்று நம் வாழ்விலும் அதே வல்லமையை விளங்க செய்ய, ஆண்டவருடைய கண்கள் பூமி எங்கும் உலாவிக் கொண்டிருக்கிறது. இந்த உத்தம இருதயம் என்பது ஏதோ வெறும் பக்தி செயல்களை செய்வதோ, உலகப் பிரகாரமான நீதிமானாய் வாழ்வதோ, தான தர்மங்களை செய்வதோ மட்டுமல்ல, அதற்கு மேலாக ஆபிரகாமை போல, மோசேயை போல, தாவீதைப் போல, அப்போஸ்தலராகிய பவுலை போல கிறிஸ்து இயேசுவில் இருந்த சிந்தையே நம்மிலும் காணப்பட வேண்டும்.

நம்முடைய உத்தம இருதயம் ஆவிக்குரிய காரியங்களில் மட்டுமல்ல, பூமிக்குரிய வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியிலும் வெளிப்பட வேண்டும். நாம் கிறிஸ்துவின் நற்கந்தங்களாய் அவருடைய வாசனையை எங்கும் வீச வேண்டும். இனி நான் அல்ல கிறிஸ்துவே எனில் ஜீவிக்கிறார் என்ற உணர்வோடு வாழ வேண்டும். இப்படிப்பட்ட உன்னதமான, உத்தமமான ஒரு வாழ்வை நாம் வாழும் பொழுது. அன்று ஆதிதிருச்சபை மற்றும் அப்போஸ்தலர்களைக் கொண்டு ஆண்டவர் செய்த வல்லமையான காரியங்களை, இன்று நம்மை கொண்டும், திருச்சபையை கொண்டும் செய்ய முடியும். ஊழிய பாதையில் மட்டுமல்ல, சமுதாய வாழ்வில் மட்டுமல்ல, தனிப்பட்ட முறையில் நம்மிடத்தில், நம் சந்ததியாரிடத்திலும் ஆண்டவருடைய வல்லமை வெளிப்படும்.

ஆனால் இன்று அனேகர் வெளிப்படையான முறையில் ஆண்டவருக்கு மகிமையான காரியங்களை செய்கின்றனர். உலகப் பிரகாரமான நீதிமான்களாக வாழ்கின்றனர். இது ஒருவேளை மனிதர்கள் முன்பாக உத்தமர்கள் என்ற பெயரை வாங்கித் தரலாம். ஆனால் தேவனைப் பற்றிய உத்தமமான இருதயம் என்பது, அதற்கு மேலானதாய், அவருடைய ஐக்கியத்தையும், பிரசன்னத்தையும் தேடி அவரோடு வாழும் வாழ்வை, இவ்வுலகில் உள்ள மற்ற எதை காட்டிலும் அதிகமாக வாஞ்சிப்பதாகும். அவரை நம்முடைய ஆத்ம மணவாளராய் ஏற்று அவருடைய சித்தத்தை மாத்திரம் நிறைவேற்றும் ஒரு வாழ்வை வாழ்வதாகும். அப்படிப்பட்ட வாழ்வை நாம் வாழும் பொழுது நம் மூலமாய் அநேகர் கிறிஸ்துவண்டை சேர தேவ வல்லமை வெளிப்படும். சமுதாயத்திலும் திருச்சபையிலும் நம் குடும்பத்தார் மத்தியிலும் ஆசீர்வாதத்தை கொண்டு வருகிற ஆசிர்வாத வாய்க்கால்களாய் நாம் காணப்படுவோம். தேவன் தாமே இப்படிப்பட்ட கிருபையை நமக்கு அருளி, அவரைப்பற்றும் உத்தம இருதயத்தோடு வாழ உதவி செய்வாராக, ஆமென், அல்லேலுயா.